இந்து தமிழ் திசை
தமிழால் இணைவோம்
04.03.25

# நீதிபதிகள் நியமனத்தில் சமூக நீதியை நிலைநாட்ட வேண்டும்

## தொல்.திருமாவளவன் எம்.பி. வேண்டுகோள்

மதுரை

உயர் நீதிமன்ற நீதிபதிகள் நியமனத்தில் அரசும், சட்டத் துறையும் சமூகநீதியை நிலைநாட்ட வேண்டும் என, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் கேட்டுக்கொண்டார்.

உயர் நீதிமன்ற நீதிபதிகள் நியமனத்தில் சமூக நீதியைக் கடைப்பிடிக்கக்கோரி சமத்துவ வழக்கறிஞர்கள் சங்கம் சார்பில், மதுரை மாவட்ட நீதிமன்றம் அருகே ஆர்ப்பாட்டம் நடந்தது. இதில் வாஞ்சிநாதன், பசும்பொன் பாண்டியன் உள்ளிட்ட வழக்கறிஞர்கள் பங்கேற்றனர்.



வழக்கறிஞர்கள் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற விடுதலைச்சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன். படம்: எஸ்.கிருஷ்ணமூர்த்தி

ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற தொல்.திருமாவளவன் எம்பி செய்தியாளர்களிடம் கூறியதாவது:

உயர் நீதிமன்றங்களில் 12 நீதிபதிகள் புதிதாக நியமிக்கப்படுகின்றனர். குறிப்பாக தென் மாவட்டங்களைச் சேர்ந்த பிரமலைக்கள்ளர், மறவர், புதர வண்ணார், ஆதிதிராவிடர் உள்ளிட்ட சில சமூகத்தினருக்கான பிரதிநிதித்துவம் இல்லாத சூழலில் அவர்களுக்கும் வாய்ப்பளிக்க வேண்டும்.

ஏற்கெனவே இது தொடர்பாக பார் கவுன்சிலில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர். தொடர்ந்து இதுகுறித்து தமிழ்நாடு சட்ட அமைச்சரிடமும் முறையிட்டுள்ளனர். சமூக நீதியை நிலைநாட்ட அரசும், சட்டத் துறையும் கவனம் செலுத்த வேண்டும். தென்மாவட்ட ஜனநாயக சக்திகள் இணைந்து மதுரையில் சமூக மதநல்லிணக்கப் பேரணிக்கு முயற்சி எடுத்துள்ளனர். மார்ச் 9-ல் நடக்கும் இப்பேரணிக்கு மாநகர காவல்துறை அனுமதி மறுத்திருப்பது அதிர்ச்சி அளிக்கிறது. யாருடைய உணர்வுகளையும் தூண்டும் வகையில் நடத்தும் பேரணி அல்ல. யாருக்கும் எதிரான பேரணியும் இல்லை. காவல்துறை அனுமதி வழங்க வேண்டும்.

திமுக கூட்டணியில் எந்த சலசலப்பும் இல்லை. எங்களுக்கு கருத்து முரண்பாடுகள் இருந்தாலும் கட்டுக்கோப்புடன் இருக்கிறோம். இல்லாததை இட்டுக்கட்டி சிலர் பேசுகின்றனர். திமுக கூட்டணியில் எவ்வித நெருக்கடியும் எங்களுக்கு இல்லை. கூட்டணியை உருவாக்கியதில் விசிக.வுக்கும் முக்கியப் பங்கு உண்டு. அதுபோன்று கூட்டணியைக் காப்பாற்றும் பொறுப்பும் எங்களுக்கு இருக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

முன்னதாக தொல்.திருமாவளவன் ஏற்கெனவே தான் பணிபுரிந்த மதுரை மருத்துவக் கல்லூரி வளாகத்திலுள்ள தடய அறிவியல் துறை அலுவலகத்துக்குச் சென்றார். அங்கு அவருடன் பணியாற்றிய சில அலுவலர்களை சந்தித்துப் பேசி புகைப்படமும் எடுத்துக் கொண்டார்.

இதைத்தொடர்ந்து ராஜா முத்தையா மன்றத்தில் நடந்த விழாவிலும் அவர் பங்கேற்றார். மாலையில் வில்லாபுரம் பகுதியில் நடந்த இப்தார் நோன்பு நிகழ்ச்சியிலும் பங்கேற்றார். கட்சியின் கொள்கை பரப்பு துணை பொதுச்செயலாளர் செல்லப்பாண்டியன், மாநிலப் பொதுச் செயலாளர் கனியமுதன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.